பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
நெ.100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை-28.

**சுற்றறிக்கை எண்.05/2023**

**க.எண்.23217/எஸ்1/2023, நாள். 22.06.2023**

பொருள் : அலுவலக நடைமுறை – சார்பதிவாளர் அலுவலகங்களில் ஆவணம் எழுதுபவர்கள், இடைத்தரகர்களை அனுமதிக்கத் தடை – தொடர்பாக.

பார்வை :
1. பதிவுத்துறை தலைவர், சென்னை, ஆணை எண்.61349/இ1/2006, நாள்.18.12.2006.
2. பதிவுத்துறை தலைவர், சென்னை, கடிதம் எண்.58779/இ1/2009, நாள்.18.11.2009.
3. பதிவுத்துறை தலைவர், சென்னை, சுற்றறிக்கை எண். 25-2/S2/2010, நாள்.21.06.2010.
4. பதிவுத்துறை தலைவர், சென்னை, ஆணை எண்.61492/எஸ்1/2010, நாள்.19.11.2010.
5. பதிவுத்துறை தலைவர், சென்னை, சுற்றறிக்கை எண்.50584/S1/2013, நாள்.09.02.2013.
6. பதிவுத்துறை தலைவர், சென்னை, சுற்றறிக்கை எண்.7513/S1/2020, நாள்.25.02.2020.

***************

தமிழ்நாடு அரசின் கீழ் செயல்படும் சார்பதிவாளர் அலுவலகங்களில் நடைபெறும் பதிவுப் பணிகளில் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்திடும் நோக்கிலும், ஊழலை தடுத்திடும் நோக்கிலும், கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதிவு அலுவலகங்களுக்குள் ஆவணம் எழுதுபவர்கள் மற்றும் இடைத்தரகர்களை அனுமதிக்கக் கூடாது எனவும், ஆவணம் எழுதுபவர்கள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்தும் பார்வையில் காணும் சுற்றிக்கைகளின் வழி ஏற்கெனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. இச்சுற்றறிக்கைகளின் அடிப்படையில்

Verified @ RealEstate ™

சம்மந்தப்பட்ட துணை பதிவுத்துறை தலைவர்கள் மற்றும் மாவட்டப்பதிவாளர்கள் தாங்கள் மேற்கொள்ளும் திடீராய்வுகளின்போது ஆவணம் எழுதுபவர்கள் மற்றும் இடைத்தரகர்கள் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குள் வருவது தவிர்க்கப்படுகிறதா என்பதை கண்காணித்து வருகின்றனர்.

(2). தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிம விதிகள் 1982–இன் கீழான விதி 9 மற்றும் 13(எ)–இன்படி வழங்கப்படும் ஆவண எழுத்தர் உரிமத்திற்கான நிபந்தனை (j)–இல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

> *"He (Document Writer) shall not enter into the registration office for the purpose of work relating to registration unless he is directed to do so by the registering officer concerned,"*

மேலும், பதிவுச் சட்டம், 1908 – பகுதி XVIII–A–யில் இடைத்தரகர்களைக் கையாள்வது குறித்து விரிவான விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் இந்நேர்வு தொடர்பாக ஏற்கெனவே வழங்கப்பட்ட அறிவுரைகளோடு கூடுதலாக கீழ்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன:–

(1) அலுவலக நிமித்தமாக சார்பதிவாளரால் அழைக்கப்பட்டால் தவிர அலுவகத்திற்குள் ஆவணம் எழுதுபவர்கள் நுழையக்கூடாது என்ற விதியினை சார்பதிவாளர்கள் கண்டிப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும்.

(2) இந்த அறிவுரைகளை மீறி சார்பதிவாளர் அலுவலகங்களுக்குள் ஆவணம் எழுதுபவர்கள் மற்றும் இடைத்தரகர்களின் செயல்பாடு / நடமாட்டம் கண்டறியப்படின் சம்மந்தப்பட்டவர்கள் மீது தமிழ்நாடு ஆவண எழுத்தர்கள் உரிம விதிகள், 1982–இன் விதி 16 மற்றும் பதிவுத்துறை தலைவர் சுற்றறிக்கைகளின் கீழ் உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

(3) விதிமுறைகளை மீறுபவர்களது உரிமம் ரத்து செய்யப்படுவதோடு இதனைக் கண்காணித்திட தவறும் சார்பதிவாளர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

Verified @ RealEstate™

(4) சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்கள் அமர்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை ஆவணம் எழுதுபவர்கள் பயன்படுத்தாமல் இருப்பதை சார்பதிவாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

(5) மாவட்டப்பதிவாளர்கள் மற்றும் மண்டல துணை பதிவுத்துறை தலைவர்கள் தங்களது திடீராய்வுகளின்போது இந்த நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்திட வேண்டும்.

(6). இந்த சுற்றறிக்கையினை ஆவணம் எழுதுவோர் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலக அறிவிப்பு பலகையில் விளம்பரம் செய்யவும், அனைத்து உரிமம் பெற்ற ஆவண எழுத்தர்களுக்கும் சார்பு செய்து ஒப்புதல் பெற்று வைத்துக்கொள்ளவும் சம்மந்தப்பட்ட மாவட்டப்பதிவாளர் வழி அனைத்து சார்பதிவாளர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒப்பம்./22.06.2023
பதிவுத்துறைத்தலைவர்

-/ ஆணையின்படி /-

22/6/2023

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்
(சீட்டு மற்றும் சங்கம்)

<u>பெறுநர்</u>

1. அனைத்து துணை பதிவுத்துறை தலைவர்கள்,
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள் (நிருவாகம்) மற்றும் (தணிக்கை)
3. அனைத்து சார்பதிவாளர்கள்

<u>நகல் :</u>

1. இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம்.
2. CS – பிரிவு,
   பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
   (இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட).
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.

Verified RealEstate ™